செ. கு. எண்:197 நாள் :24.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.7.2013

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள நேரடி பாசனப் பரப்புகளுக்கு கார் பருவ சாகுபடிக்கு **பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு அணைகளிலிருந்து** தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மருதூர் மேலக்கால் மற்றும் கீழக்கால் கால்வாய்களில் பாசனத்திற்கு **26.7.2013** முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களிலுள்ள **7,524 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**